


16.06.2017 வரை

2016




05.07.2016 வரை பின்
05.07.2017 வரை

# உங்கள்
# ராசி பலன்கள்

சோதிடர்
V.A. சிவராசா, B.A, B. Phil, Dip.in Edu
ஜோதிர் வித்யா ரத்னா (அரச விருதுபெற்றவர்)
சாம ஸ்ரீ தேச மானிய
56, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 2228708

2017




08.01.2016 தொடக்கம்
08.07.2017 வரை




08.01.2016 தொடக்கம்
08.07.2017 வரை

விலை:- 20/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (16.12.2014 - 16.06.2017) சனீஸ்வர மாற்றம்

## மேடம் : (அஸ்வினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம்)

விதிநாதன் சனீஸ்வரன் அட்டமத்துச் சனியாக (8) 16.06.2017வரை உலா வருங்காலத்தில் கால்பதிக்கும் விடயங்களில் மிகமிக எச்சரிக்கையாக இருங்கள். எவருக்கும் எதையும் பொறுப்பை வாங்காது கொடுக்க வேண்டாம். வெளியூர் பயணம் சிலரை இடைத்தங்கல் நாட்டில் இறக்கிவிடலாம். நீதிமன்ற வழக்குகள் இழுபட, தலையணை மந்திரத்தால் சகோதரர் மத்தியில் களேபரம் உருவாக, பேதம் காரணமாக விவாகம் ஸ்தம்பித்துவிட, காணி உறுதி மற்றும் வங்கிக் கணக்கிலும் மோசடி ஏற்பட, அரசுப் பணியாளர்கள் பல்வேறு பிரச் சினைக்கு முகங்கொடுக்க, ஆவணங்கள் தவறிப்போகும் அபாயமுண்டாக, தம்பதியர் மத்தியில் கருத்து வேற்றுமையினால் மணவிலக்கினை நாட, நோய் களினால் தேகநலம் பாதிப்படைய ஒப்பந்தங்களினால் நட்டம் தக்கவைக்க, விஷபயம், மின்சார ஒழுக்கில் கவனம் எடுக்கவும். ஜாதகத்தில் நடப்பு மகாதிசா புத்தி நன்றாக இருந்தாலும், சனீஸ்வரன் ஜனன காலத்தில் 03.06.11ல் நிற்பினும், 03.07.10ம் பார்வைகளினால் மலைபோல வருஞ் சோதனைகள் கடுகாகிப் போய்விடலாம். சனீஸ்வர விரதம் வழிபாடு செய்து வாருங்கள்.

## இடபம் : (கார்த்திகை 2,3,4ம் பாதம் ரோகிணி, மிருகசீரிடம் 1,2)

ஆயுள்காரகன் சனீஸ்வரன் கண்டகச்சனியாக 16.06.2017வரை 7ம் இடத்தில் நிற்பதினால் தொழில், வெளியூர் பயணம் காரணமாக பிரிவு ஏற்படும். இன்ப சுகங்களை அனுபவிக்க நோய்கள் தடையாக இருத்தல், காதலை இடைநடுவில் கைவிட, நோய் குணமாக சத்திரசிகிச்சை மேற்கொள்ள, நட்டம் காரணமாக பங்குத் தொழிலை முறித்துவிட, புது முயற்சிகள் ஆரம்பிக்க நம்பியிருந்த பணம் வந்து சேராமை, சீதனப் பிரச்சினை மணவாழ்வில் தடங் கலைக் கொடுக்க, பாதுகாப்பின்மையினால் திருட்டு போய்விட, லீசிங் வாகனம் பறிமுதலாக, புதிய ஒப்பந்தங்களில் நாட்டமின்மை, குழந்தைப்பாக்கியமில்லாது விடல், மனைவியின் தேகநலம் பாதிப்படைய, காதலில் சோதனையும் வேதனை யும் தக்க வைக்க, பணம், கன்னியர் காரணமாக மாமனுடன் முறுகல் நிலை ஏற்பட, பிள்ளைகளின் நடத்தைக் கோலங்களை எண்ணி மனத்துயர் வாட்ட, பதவி நிரந்தரமாகாது விடல் சொத்துப்பிரச்சினை நீதிமன்று வரை செல்ல முற்படல். ஜாதகத்தில் நடப்பு திசாபுத்தி நன்றாக இருப்பின், சனீஸ்வரனின் 03.07.10ம் பார்வை நன்மையாக இருப்பினும், பிறக்கின்ற பொழுது கிரகங்கள் நல்ல இடத்தில் அமையினும் கஷ்டங்கள் குறையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மிதுனம் : (மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3)

சத்துருசங்கார சனியாக 6ம் கோசரத்தில் சனீஸ்வரன் 16.06.2017வரை நிலை கொண்டிருப்பதினால் நோய் அகன்று இளமை பெயர, வழக்கின் முடிவு சாதகமாக இருக்க, இன்ப சுகங்கள் அனுபவிக்க, பயணம் தித்திப்பாக இருக்க, மழலைச் செல்வம் ஏற்பட, பெற்றோரின் தேகநலம் அபிவிருத்தியடைய, பங்குத் தொழிலைக் கைவிட்டு தனியாக இயங்க, மீள் நியமனத்திற்கு பச்சைக் கொடி காட்ட, இடைத்தங்கல் நாட்டைவிட்டு குறிக்கோளை அடைய, அரசு தனியார் துறைகளில் வேலைகிட்ட, சகோதரர் கிருபையினால் வாகனயோகமேற்பட, பூர் வீகச் சொத்தினை அனுபவிக்க, மேலும் ஒரு கிளை நிறுவனம் திறக்க, காதலில் வீசிய புயல் தென்றலாக மாற, ஆலய நிர்வாகங்களில் பதவிகள் சேர, குருட்டு அதிர்ஷ்டம் ஏற்பட, காணாமல் போனவர் பற்றிய தகவல் கசிய, சந்தேகக்கோடு நீங்கி சந்தோஷம் ஏற்பட, நிலத்தகராறு சுமுக நிலைக்கு வர, புதிய மனை அமைக்க பணங்கிட்டுதல். வங்கித் தொடர்பினால் பொருளாதாரம் சிறப்படைய, சுப காரியங்கள் ஏற்பட, இழுபட்ட விவாகம் இனிது முடிவடைய சனீஸ்வரனின் கோசரநிலை சாதகமாக அமையும். சுவீப் அதிர்ஷ்டம் வங்கியினால் நன்மை, குழந்தைப் பாக்கியம் ஏற்பட்டு மனம் பூரிப்படையும்.

## கற்கடகம் : (புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்)

ஐந்திலே சனீஸ்வரன் 16.06.2017வரை நிற்கும் காலத்தில் மக்களினால் கவலையடைதல், நோயினால் தேகநலம் பாதிப்படைதல், அரச அதிகாரிகளின் தண்டனைக்குள்ளாதல், பயண முயற்சி காட்டில் எறித்த நிலாவாதல், திகதி தப்பிய பொருட்கள் கைக்கெட்டல், போலியான ஆபரணங்கள், கள்ளப் பணம் பற்றிய விழிப்புணர்வு, நிலுவைகள் கூடியதால் தொடர்புகள் நிறுத்தம், குடியுரிமை பெற காகித திருமணத்தை மேற்கொள்ளல், வெளியீடுகளில் ஆர்வம் காட்டுதல், விளையாட்டு, கலைத்துறைகளில் சாதனையும் புகழும் பரிசில்களும் பெறுதல் பரீட்சை முடிவினால் கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்தல், கால் நடைகளின் இறப்புப்பற்றிய கவலை, பொறுப்பின்றி கொடுத்ததை பெற காவல் துறையை நாடல். மிருகங்கள் குறுக்கே பாய்வதால் விபத்து, விதிகளை மீறுவதினால் தண்டனை பெறல். கொடுக்கல் வாங்கல் பற்றிய பிரச்சினையால் நட்புக்கெடல் பிள்ளைகளின் நடத்தைகளைக் கண்டிப்பதால் பிரளய மேற்படல் ஜாதகத்தின் திசாபுத்தி நன்றாக இருப்பின், சனியின் 03.07.10ம் பார்வைகளுக் குரிய இடங்களின் நன்மையைப் பொறுத்து கஸ்டங்கள் குறையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கம் : (மகம், பூரம், உத்தரம் 1,2ம் பாதம்)

அர்த்தாஷ்டமச் சனீஸ்வரன் 4ல் 16.06.2017வரை நிற்பதினால் வசந்தகாலம் பாதிக்கப்படலாம், பிரயாண முயற்சியில் தடை தாமதம் தடங்கல் குறுக்கீட்டை எதிர்பார்த்தல். அவசரத்தினால் பெற்ற பணம் குறைதல் காசோலை திரும்புவதால் வங்கித் தொடர்பு கேள்விக்குறி. விளம்பரத்தை நம்பி மோசம் போதல், சகோதர வழியில் கவலை தக்கவைத்தல், மாதாவின் நோய் நிலைப்பாடு அச்சத்தைத் தருதல் பழையதை மெருகூட்டி விற்றல், சீட்டினால் மனத்துயரம், ஏலம்போடும் செய்தி கிட்டுதல். திருநள்ளாறு சென்று துன்பந்தீர சனீஸ்வரனை தரிசிக்க விரும்புதல். மீள் நியமனம் பெற விண்ணப்பித்தல். புதிய பதவி சேரும்.

ஐரோப்பிய நாட்டின் எல்லைகளைக் கடக்கையில் பிடிபடும் அபாயம், கடன் அடைக்க மேலும் கடன்படல், அசாதாரண வேகம் விபத்தினைத்தரல், சுப காரியம் நடாத்த பணத்திற்கு திண்டாட்டம், மறைமுக எதிரியினால் காரியக்கேடு. கடல் மூலம் அவுஸ்திரேலியா சென்று அபாயத்தில் சிக்குதல் குளவி, மந்திகள், மயிர்க்கொட்டியினால் பாதிப்படைதல். வேலித்தகராறு கைகலப்பில் முடிதல், புதியன கொள்ளுமுன் நம்பகத்தை அவதானித்தல். தனித்துச் சென்று துயரை விலைக்கு வாங்குதல் சிலருக்கு சுவீப் அதிர்ஷ்டமுண்டு. பொறுப்பின்றிக் கொடுத்துக் கவலைப்படல். நோயினால் நலம் பாதித்தல்.

## கன்னி: (உத்தரம் 3,4, அத்தம், சித்திரை 1, 2)

ஏழரைச்சனி நீங்கியமை நொந்த உள்ளத்திற்கு ஆறுதலாகும். தைரிய வீரியச் சனியாக சனீஸ்வரன் 16.06.2017வரை 3ல் நின்று ஈடுபடும் துறைகளில் வெற்றி ஏற்பட வைத்தல் கைவிட்ட பயணம் மீண்டும் ஆரம்பித்தல், பணக் கொடுக்கல் வாங்கல் சுமுகமாக நடைபெறல், பரீட்சைச் சித்தியினால் உத்தியோகம், உயர்கல்வி, புலமைப்பரிசில், பதவி மற்றும் சம்பள உயர்ச்சி ஏற்படல், நோய்கள் குணமடைதல், புத்திரபாக்கியங்கிட்டுதல், விவாகத்தடை நீக்கம், மூத்த சகோதரியின் கருணையால் வாகன யோகம், சிறையினின்றும் மனைவருதல், கொண்டாட்டங்களில் கலந்து சிறப்பித்தல் மஞ்சட்கோட்டிலும் விபத்தேற்படல், ஆரியக்கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாக இருத்தல், பொறுப்புக்களை ஒப்படைத்தாலும் கண்ணோட்டம் இருத்தல், மாற்றுப்பயிர்ச் செய்கையில் நாட்டமேற்படல், பெற்றோர் நினைவாக தானதர்ம கைங்கரியங் களில் ஈடுபடல் அரசியல் விமர்சனத்தால் நட்புக்கெடல், கன்னியரின் தொடர்பால் குடும்பத்தில் சுனாமி ஏற்படல் இரவுப்பொழுதில் பிரயாணம் செய்யாமை, முதியோர் தனித்திருக்காமை, விவாகத்திற்காக வெளியூரினின்றும் மணமக்கள் வருகைதரல், ஆடம்பரப் பொருட்களைக் கொள்வனவு செய்ய கடன்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துலாம் : (சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3)

ஏழரைச்சனி கடைக்கூறு நடைபெற்று 16.06.2017ல் முற்றாக நீங்கி விடுவதினால் அதிர்ஷ்ட சாலியாக வர 2ல் சனி உறுதுணையாக விளங்கப் போகின்றார். வாக்குச்சனி, பாதசனியானது துலாத்தில் உச்சம்பெற்று கைவிட்டி ருந்த விடயங்களை மீளவும் தொடங்கச்செய்து வெற்றிக்கனியைப் பறிக்கச் செய்து விடலாம். இழந்திருந்த சொந்த மண்ணில், மனையில் கால்பதித்தல், தடைப்பட்ட விவாகம் நிறைவேற, நோய் குணமடைய, சகோதர உறவில் சுமுக நிலை ஏற்பட, நட்டம் இலாபமாக மாறிவிட, சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினை சுலபமாகத் தீர்ந்துவிட சுவீப் அதிர்ஷ்டமேற்பட, பெற்றோரின் தேகநிலை மேம்பட, இடைத்தங்கல் நாட்டைக் கைவிட, பரீட்சை முடிவுகள் வெற்றிப்படிக்கட் டில் கால்பதிக்க, மக்களின் அழைப்பினால் வெளியூர் யோகம் கிட்டிவிட, நிலுவைகள் வந்தடைய, பூப்படைய, வாகனயோகம் கைகூட, தகவல்கள் சாதக மாக விளங்க, புதிய இடங்களில் மனை, வியாபார நிலையம் அமைக்க மழலைச் செல்வம் ஏற்பட காதல் மலர, அயலவருடன் ஏற்பட்ட மனத்தாங்கல் அகன்றுவிட சனிபார்வையின் மூலம் எதிர்காலம் சிறப்படைய, குறுக்கீடுகள் தடைகள் நீங்கி நன்மைகள் ஏற்படும். அதிர்ஷ்ட இலாபச் சீட்டுக்களால் பணம் கைக்கெட்டும்.

## விருட்சிகம்: (விசாகம் 4, அனுசம், கேட்டை)

ஏழரைச்சனி ஜென்மத்தில் (1) 16.06.2017வரை நிற்கையில் மங்கு, குங்கு, மரணச் சனியினருக்கு தொல்லைகள், துன்ப நிகழ்வுகள் ஏற்படும் கோசர நிலைப்பாட்டைத் தவிர்க்கமுடியாது. பொங்கு சனி எனின் நன்மைகள் ஏற்படச் சனீஸ்வர விரதம், வழிபாடு செய்வதன்மூலம் சோதனைகள் வேதனைகள் நிச்சயம் நீங்கிவிடும். பிள்ளைகளின் ஒவ்வாத நடத்தைகளைப் பவ்வியமாக கண்டித்தல், பொறுப்பின்றி கடன் கொடாதிருத்தல், புதியன கொள்ள முன் நம்பகத்தைப்பார்த்தல், பாதுகாப்பின்றி பணத்தைக் கொண்டு செல்லாமை, சத்திரசிகிச்சையினால் நோய் குணமாக்கல். சட்டவிரோத மின்பாவனையால் தண்டம் பெறுதல். பெற்றோரின் புத்திமதியை கேட்பதால் துயர் விலகும்.

"ஈகோ" மனப்பாங்கினைக் கைவிட்டு கவின் நிலையை ஏற்படுத்தல், புதிய நட்பினை முளையிலேயே கிள்ளிவிடல், துன்பதுயரங்களுக்கு மருத்தீடு, பேய், பிசாசு, பில்லி, சூனியம், செய்கை என அச்சப்படல், புதியன தொடங்கு முன் ஜாதகத்தின் நடப்பு மகாதிசா புத்தி நன்றா எனப் பார்த்தல், மனவியுடன் சுமுக நிலையைப் பேணுதல், முலாம் பூசிய நகைகள், கள்ள நோட்டுக்கள் பற்றிய விழிப்பு: விடஜெந்துக்களின் தாக்கம், ஆவணங்கள் தவறிப்போதல், கொடுத்தவற்றை மீளப் பெற முறைப்பாடு செய்தல் முலிய பலாபலன்கள் ஏழரைச்சனியினால் ஏற்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனு : (மூலம், பூராடம், உத்தராடம் 1)

ஏழரைச்சனி 16.12.2014 தொடக்கம் ஏழரை ஆண்டுக்கு நடை பெறுவதினால் தெய்வ செயலாக சனீஸ்வரன் தனுவில் நட்புப் பெற்றபடியினால் கண்ணிற்கு வரும் கேடு புருவத்துடன் சென்றுவிடலாம். பொங்கு சனி எனின் இன்புற்று சிறப்புடன் வாழத் தலைப்படுதல், மங்கு குங்கு மரணச்சனி எனின் தெய்வ நம்பிக்கையினால் வெற்றிப்படிகளில் கால்பதித்தல், உதவி செய்து உபத்திர வப்படல், வெளியூர் பயணம் சிலருக்கு காலைவாரிவிடலாம் எனினும் முயற்சியின் பின்னர் கைகூடிவிடும். வெளியூர் உறவுகள் விஜயஞ் செய்தல், பங்குத் தொழிலில் சேர விரும்புதல், மணவிலக்குப் பெறும் யோசனையைக் கைவிடல் வெற்றுக் காசோலையில் கையெழுத்திடாமை புதியமனை அமைக்க பூர்விகச் சொத்தினை விற்க எண்ண மிடல், மாமன்மாருடன் ஏற்பட்டிருந்த முரண்பாடு விலகிவிடல், குழந்தைப் பேற்றுக் காக தமிழகம் செல்ல விரும்புதல், பெற்றோரின் வற்புறுத்தலினால் காதலைத் தியாகம்செய்ய, நோய்நீங்க சத்திரசிகிச்சை மேற் கொள்ள தத்துப்புத்திரயோக மேற்பட, பரீட்சை முடிவுகள் எதிர்கால முன்னேற்றத்திற்கு காலாக அமைய, சனீஸ்வரனின் திருவருள் கடாட் சம் உங்களை பாரினிலே உயர்த்திவிடும். ஆஞ்சநேயரை வழிபட்டு வர நொந்த உள்ளம் ஆறுதலடையும்.

## மகரம் : (உத்தராடம் 2,3,4 திருவோணம், அவிட்டம் 1,2)

சனீஸ்வரனின் ஆட்சிவீடான மகரத்தில் 16.06.2017வரை இலாபச் சனியானது உலாவந்து எண்ணியதை, திட்டங்களை, நன்மையும் முன்னேற்றமும் ஏற்படும் விதத்தில் 11ம் கோசர நிலையை வியக்கும் வண்ணம் உங்களுக்குச் சார்பாக தக்கவைக்கப் போகின்றார். அரசுத் தொழில் கிட்ட பிரமுகர்களின் கருணை ஏற்படல், மழலைச் செல்வம் கிடைக்க வெளியூர்ப் பயணம் வெற்றியை நல்க, மூத்த சகோதரங்களின் உதவி கைகூட, புதியமனை அமைக்க வாகனயோகம் கிட்டிவிட, வருத்திய நோய் கட்டுப்பாட்டில் வந்துவிட பழையதை விற்றுவிட, பகைமை மறந்து சிநேகிதத்திற்கு கரம்நீட்ட, மேலும் ஒரு கிளை நிறுவனம் திறக்க தெய்வ தலங்களுக்கு யாத்திரை மேற்கொள்ள, சொத்துப்பிரச்சினை சுமுகமாகத் தீர, கொடுத்தகடன் இறைவழிபாட்டில் வந்தடைய பொறுமையினால் துயர் விலகிவிட, எதிரியின் தொல்லை அகன்றுவிட குடியுரிமை பெறும் இனிய செய்திகிட்ட, புதிய இணைப்புக்கள் பொருத்த முறை தவறிய திருமணம், வயோதிபத்திலும் பாலியல் சேஷ்டைகள், திருடரின் தொல்லைகள், மக்களின் செய்கையால் அவமானப்படல் தொழிலைக் கைவிட்டு வெளியூர் செல்ல முயற்சித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பம் : (அவிட்டம், 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3)

ஜீவனசனியான கண்டகச் சனீஸ்வரன் 16.06.2017வரை 10ம் இடத்தில் நின்று கோசர ரீதியில் கெடுதியான பலாபலன்களை தரமுயன்றாலும் கும்பம் சனியின் ஆட்சி இல்லமாக அமைந்தபடியினால் வெற்றிப்பாதை உங்களுக்காக ஏற்படுத்தி வைப்பார். மூடியவற்றை திறந்து நடாத்த, கைவிட்டிருந்த பயணத்தை மீளத் தொடங்க, உயர் கல்வியைத் தொடர கௌரவப்பதவிகள் ஏற்பட பிரமுகர் கள் உதவிட சுபகாரியம் நடாத்த கடன்பட, இடைத்தங்கல் நாட்டைவிடுத்து சிலர் தாயகம் திரும்ப சுவீப் பணத்தைக்கொட்ட, மீள் நியமனம் கைக்கெட்ட, நீதிமன்ற முடிவுகள் சாதகமான தீர்ப்பினை வெளியிட, நீரிழிவு நோயின் தாக்கம் குறைந்து விட, வங்கிக்கடன் கிடைக்க சிலர் பங்குத்தொழிலில் சேர்ந்துவிட, விவாகரத்துக்கு விண்ணப்பிக்க, பொருட்கள் கொள்வனவிற்கு அடிக்கடி பிரயாணம் தக்க வைக்க, சொத்துப்பிரச்சினையைப் பிதா சுமுக நிலைக்குக் கொண்டுவர கறவைப் பசுக்களினால் இலாபமேற்பட, நீண்ட நாள் கனவு பலித்துவிட, காதலில் ஏற்பட்ட வேதனை, சோதனை மறைந்துவிட ஆடம்பரப் பொருட்கள் கொள்வனவு செய்ய, கடன்தொல்லை நீங்க வழிபிறக்கும். அதிர்ஷ்ட எண்களில் பெயரை ஆக்கி இரத்தினக் கற்களை ஆபரணங்களில் பதித்து அணிய நன்மைகள் ஏற்படும்.

## மீனம் : (பூரட்டாதி 4. உத்தரட்டாதி, ரேவதி)

அட்டமத்துச்சனி (8) 16.12.2014ல் நீங்கியதே மாபெரும் கைங்கரிய மாகும் 16.06.2017வரை பாக்கிய சனி (9) நடைபெறுவதினால் வெற்றிக்கு பச்சைக்கொடி காட்டப்படும். துணிவுடன் செயல்களில் ஈடுபடுங்கள். நாளை உமதேயாகும். பிதாவுடன் ஏற்பட்டிருந்த மனக்கசப்பு மறையும். மனைவியின் சொற்கேட்பதினால் மோசடி விலகும். சிலர் தந்தையை இழக்க, பிரியவும் நேரிடலாம். வெளியூர் பயணம் பிறர் உதவினால் மட்டுமே கைகூடும். புதியன கொள்வனவிற்காக பணம் பெற கடன்படல், மக்களின் உயர்வுகேட்டு மகிழ்வுறல், சிலருக்கு அரசியல் வாதிகளின் தலையீட்டினால் பதவிக்கு உயர்வு ஏற்படல், விபத்தினால் மயிரிழையில் உயிர் தப்பிவிடல், சகோதரிகளுக்காக விவாக பந்தத்தில் ஈடுபடாதிருத்தல் நோய் நீங்க இயன் மருத்துவத்தையும், தெய்வ தலங்களையும் நாடிவிடல், மூத்த சகோதரரினால் வசந்தகாலம் பிறத்தல், குடும் பத்தகராறு காவல்துறை செல்ல வைத்தல், சிலர் சின்னவீடுகளை நாடத்தலைப் படுவதினால் களேபரம் உருவாதல் உடையவன்பாராவிட்டால் தொழில் பாதிப் படைதல், பேதம் காரணமாக, அள்ளிவைப்போரினால் விவாகம் நின்றுவிடல் விளையாட்டு மற்றும் கலைத்துறையில் பரிசில்கள் கிட்டுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு கேது மாற்றப் பலாபலன்கள்
# (08.01.2016 - 09.07.2017 வரை)

## மேடம்

08.01.2016தொடக்கம் 09.07.2017வரை ராகு 5லும் கேது 11லும் நிற்கையில், முரண்பட்டவர்கள் உறவிற்கு கைகொடுப்பர். மாமனாரின் ஆதரவால் வாகன யோகமுண்டு. மழலைப் பாக்கியம்கிட்டும். நட்டநிலைப்பாடு இலாபத்தைத் தரும் சுபகாரியம் ஏற்படல், மூத்த சகோதரர் பொறுத்தவேளை உதவி நல்குதல். பரீட்சை முடிவினால் வசந்தகாலம் பிறத்தல். நோய்நீங்கி தேகம் வனப்பு மிகும். பயணம் வெற்றியை நல்கும். புதியனவற்றில் கால்பதித்தல் விவாக முயற்சி கைகூடல். சுவீப் அதிர்ஷ்டமுண்டு. துர்க்கா வழிபாட்டுடன் கேதீச்சரத்தானையும் மறக்கவேண்டாம்.

## இடபம்

08.01.2016தொடக்கம் 09.07.2017வரை இராகு 4ல் கேது 10ல் இருப்பதினால் பொறுப்பின்றி கொடுத்தது மீண்டும் பெற இயலாது வருந்துதல். அரசுப் பணியில் மேலதிகாரிகளைப் பகைக்கவேண்டாம். தாயாரின் நோய் நிலைப்பாடு அச்சந்தரல். பயணம் இடைத்தங்கல் நாட்டில் சேர்த்துவிடல். தொழிலில் சக ஊழியர்களின் ஒத்துழையாமை காணப்படல். வீடு, நாடு மாற்றம் எதிர்பார்க்கவும் பிறரை நம்பி ஒப்படைக்கவேண்டாம். வங்கித் தொடர்பு அற்றுப் போகலாம். நோய்கள் குணமடைய தெய்வதலங்களை நாடல், கௌரவப்பிரச் சினையால் அழைப்புக்களைப் பகிஷ்கரித்தல். கல்விப்பெறுபேறுகள் பாதகமாக அமையலாம்.

## மிதுனம்

08.01.2016 தொடக்கம் 09.07.2017வரை ராகு 3ல் கேது 9ல் உலாவரும் போது இயன்றவரை சகோதரவழியில் தலையிடாமை, பிதாவின் நோயில் கவன மெடுத்தல் நிகழ்வுகளை கொண்டாட பணத்தட்டுப்பாடு கவின்நிலை கெடுவதால் குடும்பத்தில் ஒற்றுமை பாதிப்பு. புதியன கொள்வனவில் நம்பகத்தில் விழிப்படை தல், நிலுவைகள் பெற தொலைபேசிப் பாவனை, விட ஜெந்துக்களில் எச்சரிக்கை, போலியானவை கைக்கெட்டல். உணவுக்கட்டுப்பாட்டால் நோயின் பாதிப்பு குறைவடைதல், வெளியீடுகளில் ஆர்வம் காட்டுதல். விதிகளை மீறுவதால் தண்டம் பெறல். பங்குத்தொழிலை கைவிட்டு தனித்தியங்க முயலல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்கடகம்

08.01.2016 தொடக்கம் 09.07.2017வரை ராகு 2ல் கேது 8ல் தரித்திருப்பதால் பிள்ளைகளின் நடத்தைக் கோலங்களையிட்டு மனக்கிலேசமடைதல். எவருக்கும் வாக்குறுதி கொடுக்காமை, பிறா் அழைத்தால்மட்டும் பயணம் மேற்கொள்ளல். காதலையிட்டு சந்தேகமடைதல். குழந்தைப்பேற்றுக்காக மருத்துவ ஆலோசனை, காரியசித்திக்கு அலைச்சலும் வேளைதப்பிய உணவும், பழைய பகைமை முளைவிடல், மின்சாரம் பற்றிய எச்சரிக்கை. கால்நடைகளினால் பயிரழிவு, உணவு நஞ்சாதல். டெங்குநோயின் தாக்கம் மஞ்சட்கோட்டிலும் விபத்து. சத்திரசிகிச்சை மேற்கொள்ளல். புதிய இடங்களில் தொழில் ஆரம்பித்தல்.

## சிங்கம்

08.01.2016தொட்டு 09.07.2017வரை ராகு 1ல் கேது 7ல் நிலைகொண்டிருக்க காணாமல் போனவா்பற்றிய தகவல் ஏற்படல். நோயைக் குணப்படுத்த தெய்வதலங்களை நாடுதல். பட்ட கடனைக்கட்ட சொத்தினை விற்க முயலல். துணைவியின் பேச்சைக் கேளாமையால் துயா்மிகுதல். திடீரென தேகநலப் பாதிப்பு. சக ஊழியா்களை அரவணைத்தல். புதியமனை அமைக்க ஏற்பாடு செய்தல். டெங்கு ஒழிக்க சுற்றாடல் சுத்தம். எதிா்கால நலனுக்காக சேமித்தல். வாகனம் சதா தொல்லை கொடுத்தல். திருடா்பயம். எதிரியால் அச்சம் தொடா் கவலைகளால் சுடலை ஞானம் பிறத்தல் தேகநலம் மேம்பட யோகா, தியான முயற்சிகளில் நாட்டமேற்படல்.

## கன்னி

08.01.2016தொடக்கம் 09.07.2017வரை ராகு 12ல் கேது 6ல் தடம் பதிப்பதினால் வழங்கின் முடிவு சாதகமாதல் மாமன்மாருடன் ஏற்பட்ட பிணக்கு மறைதல். கல்விப்புலத்தினால் மனமகிழ்வு. சுப காரியச்செலவு. அவமானம், கௌரவக் குறைவு ஏற்படல். புதியன திறக்க நகைகளை அடகுவைத்தல். ஆவணங்கள் இன்மையால் தண்டம். விசாரணையின் பின் விவாகத்தைக் கைவிடல். கௌரவ பதவிகள் கிட்டுதல். நோயினால் தேகநிலை கிழடுதட்டுதல். கண்டும் காணாமல் சென்றதால் எதிரியின் தொல்லை நீக்கம். அசாதாரண வேகத்தினால் விபத்து. போதைப்பொருட்களில் நாட்டம். கற்புக்குச் சோதனை, துன்பத்திலும் விடாமுயற்சி. சகுனங்களில் நம்பிக்கைவைத்துச் செயற்பட்டதால் நன்மை விளைதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துலாம்

08.01.2016தொடக்கம் 09.07.2017வரை ராகு 11ல் கேது 5ல் உள்ளதால் சகோதரர்களின் ஆதரவும் உதவியும் கிடைத்தல். புதிய ஜீவன் ஏற்படல். பயணம் குறிக்கோளை அடைதல். அரசுப்பணி கிடைத்தல். நோய்குணமடைதல். வழக்கின் முடிவு சாதகமாதல். பரீட்சையில் சாதனை, இழுபட்ட விவாகம் நிறைவேறல். புதிய இடத்தில் கடைதிறத்தல். புதிய இணைப்புக்கள் பொருத்தப்படல். வாகனயோகமுண்டு. ஜாதகத்தில் நடப்பு திசாபுத்தி நன்றாக இருப்பின் முன்னேற்றம் உச்சக்கட்டத்திற்குச் செல்லும். சர்ப்ப கோவில்களுக்குச்சென்று வழிபடின் கஸ்டங்கள் குறைவடையும். கால சர்ப்பதோஷம், நாகதோஷம், குரு சண்டாளதோஷம் இருப்பின் திருமணத்திற்கு தடைதாமதம் ஏற்படுவதினால் நாக விளக்கு எரித்து வழிபடவும்.

## விருட்சிகம்

08.01.2016தொடக்கம் 09.07.2017வரை ராகு 10ல் கேது 4ல் உலாவ செய்தொழிலை உயிரினும் மேலாகக் கவனிக்கவும். அலைச்சல் காரணமாக தேக நலப்பாதிப்பு, பொறுப்பின்றிக் கொடுத்த கடன் மீளவராமை, நிலம், சொத்து முன்னிட்டு வழக்கு, லீசிங் வாகனம் பறிமுதலாகும் அச்சம். விஷ பிராணிகள் பற்றிய விழிப்பு. மாதாவின் தேகநலப்பாதிப்பு. நிலுவை கூடியதால் இணைப்புக்கள் துண்டிப்பு, முரண்பாட்டினால் களேபரம். வயோதிபத்திலும் திருமண ஆசை. உயில் எழுதிவைத்தல். பாலியல் துன்புறுத்தல். நெறிகெட்ட கன்னியர் தொடர்பு. கண்சிகிச்சை கர்ப்பச்சிதைவு. நோயினால் ஓய்வுபெற விரும்புதல். பயிரழிவு. நட்டநிலைப்பாடு சமாந்தரப் பயணத்தாலும் விதிமுறை மாறியதாலும் தண்டம் பெறுதல்.

## தனு

08.01.2016 தொடக்கம் 09.07.2017வரை ராகு 9ல் கேது 3ல் நிற்க பிதாவின் தேக சௌக்கியப் பாதிப்பு, சகோதரர்களுடன் மாறுபட்ட மனப்போக்கு, சொத்துரிமைபற்றிய வழக்கு, அதிகாரிகளின் சீற்றம். நிரந்தர நியமனம் கிட்டுதல், நோயினால் தைரியம் வீரியம் பாதிக்கப்படல். பயணம் முற்றுப் பெறாமை. தாமதம் அக்கறை இன்மையினால் நிலுவையில் கெடுபிடி, கலப்படத்தினால் தண்டனை. உயர்கல்விக்கு தெரிவாதல். காதலில் சோதனை பெற்றோரின் வற்புறுத்தலினால் திருமணபந்தம் நீர்க்கண்டம், எதிர்பாராத அதிர்ஷ்டம் இயந்திரங்களுடன் கவனமாக பழகுதல். வழுக்கல் சறுக்கலினால் உறுப்பு பாதிப்பு. அதிர்ஷ்ட இலாபச்சீட்டினால் பணவரவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகரம்

08.01.2016 தொடக்கம் 09.07.2017வரை ராகு 8ல் கேது 2ல் இருப்பதால் பேராசையினால் பொருட்சேதம் இலட்சியமின்றித் திரிதல். அரசபயம் காவல்துறை சென்று முறையிடல் குடும்பக் கலகத்தினால் பிரிவுத்துயர். விளம் பரத்தை நம்பி பண இழப்பு. விசாரியாமல் இறங்கித் துயரடைதல். மின்சாரத்தால் கேடு. உணவுக்கட்டுப்பாட்டினால் நோய் நீங்குதல். செவ்வாய் தோஷத்தினால் அதிகரித்த கிரகபாவத்தினால் திருமணம் இழுபடல். தகுந்த துணையின்றிச் சென்றதால் ஆபத்து கையூட்டினால் சிறைவாசம். அனுமதிக்காக அலைந்து தேகநலம் பாதிப்பு. கையடக்கத் தொலைபேசிப் பேச்சினால் விபத்து. நிர்வாகங் களில் பதவிகள் கிட்டல். நிலுவையின் ஒரு பகுதி வந்தடைதல். ஏலம்போகும் செய்திகேட்டு அவலம். சத்திரசிகிச்சை ஏற்படல்.

## கும்பம்

08.01.2016தொடக்கம் 09.07.2017வரை ராகு 7ல் கேது 1ல் உலாவரும் போது, தனிமையில் வாழ முயன்று உளப்பாதிப்பு. விவாகம் இழுபடல். சோதனை வேதனைகள் இறுதியில் சாதனையைத் தக்கவைத்தல். மருத்தீடு எனக் கலக்கமடைதல். மக்கள் பற்றிய கவலை வாட்டுதல். பயணம் இடைத்தங்கல் நாட்டில் இறக்கல். பொருட்கொள்வனவில் நம்பகம் பற்றிய எச்சரிக்கை இதய நோயினால் வருத்தமடைதல். அதிர்ஷ்ட எண்களுக்கு பெயரினை வைத்து துன்பத்தினின்றும் மீளுதல். காதலில் வீசிய புயல் தணிதல். புத்திரபாக்கியம் சிறைக்கதவு திறத்தல். ஓடிச்சென்று வாகனத்தில் ஏற முற் படாமை மாதாவழியில் கவலை ஏற்படல். விலங்கு குறுக்கறுத்து விபத்தேற்படல்.

## மீனம்

08.01.2016 தொடக்கம் 09.07.2017வரை ராகு 6ல் கேது 12ல் நிற்கையில், நீண்டகால பகைமை மறைதல். சிறையினின்றும் வெளிவரல். மாமன்மாரின் ஆதரவு கிட்டுதல். புதியமனை அமைக்க ஆயத்தஞ் செய்தல். நோயின் உபாதை நீங்கிவிடல். புதியன பொருத்தப்படல். ஒப்பந்தங்களை ஏற்றல். பயணம் இழுபட்டு நிறைவேறல். எதிர்பாராது சுபகாரியம் ஏற்படல். அரசு தனியார் துறையில் வேலைவாய்ப்பு. முறைமுக எதிரிகளால் சஞ்சலம். அநாமதேய தொலைபேசி மிரட்டலினால் பதகளிப்பு பழைய மனையைப் புதுப்பித்தல். சீட்டுக் கட்டியதால் மோசடி தக்கவைத்தல். பெண்களால் அவமானம், கௌரவக்குறைவு ஏற்படல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாழ மாற்றம் (05.07.2016 வரை)

## மேடம்:

அஷ்டமத்துச்சனி கெடுதலான பலன்களை ஏற்படுத்தும் வேளை தெய்வ செயலாக 05.07.2016வரை வியாழபகவான் 5ல் நிற்பது நொந்த உள்ளத்திற்கு ஆறுதலாகும். வசதிவாய்ப்பும் உடையவர்கள் பயணம், மனை அமைத்தல், புதிய கல்விப் புலம் நாடுதல், பங்கை முறித்து தனித்துச் செயற்படல், புத்திர பாக்கியம் கிட்டுதல், அரச வேலை வாய்ப்பு, மாமன்மாரின் உதவி, சகோதரங்களினால் வசந்தம், விவாகம், சுவீப் அதிர்ஷ்டம், குடியுரிமை கிட்டுதல், நோய் குணமடைதல்.

## இடபம்:

கண்டகச்சனி (7) துன்ப துயரங்களை அனுபவிக்கச் செய்ய முயன்ற வேளை, தர்மபுத்திரரை வனவாசஞ் செல்ல வைத்த நாலில் குரு 05.07.2016வரை நிற்பதினால், பயணம் கேள்விக் குறியாதல், தாயாரின் தேகநலப் பாதிப்பு, திகதிதப்பிய பண்டங்கள் வரல் வாகனத்தினால் செலவு, வங்கித் தொடர்பு அறுதல். விவாக முயற்சி இழுபடல். குருவின் 5,7,9ம் பார்வைகளினால் திசாபுத்தி நன்றாக இருப்பின் வெற்றிக் கனியைப் பறித்தல். தெட்சணாமூர்த்தி வழிபாடு அர்ச்சனையை மேற் கொள்ள நன்மை கிட்டுதல்.

## மிதுனம்:

குரு கோசர நிலையில் 05.07.2017வரை 3ல் நிற்கையில் தைரிய வீரியம் கெடுதல். கடன் தொல்லையால் மனவிரக்தி, சகோதரர் வழியில் மனக்கிலேசம், பயணம் பற்றிய சஞ்சலம், சிநேகிதர் கன்னி யரால் கெடுதி ஜாதகத்தில் குரு நல்ல இடத்தில் இருப்பின் சோதனைகள் சாதனையாகும். பொறுப் பின்றிக் கொடுக்காமை, மனைவி சொற்கேட்டல், நட்பை முளையிலே கிள்ளிவிடல், கடல் மூலம் அவுஸ்திரேலியா செல்லாமை, சர்ப்பக்கடியில் விழிப்பு, ஆவணங்கள் தவறி விடல், நோய் நீங்க சத்திரசிகிச்சை. சுவீப் அதிர்ஷ்டமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்கடகம்:

ஐந்தில் சனி நடக்கையில் தெய்வ செயலாக குரு 05.07.2016 வரை 2ல் நிற்பதினால் கடன்தொல்லை நீக்கம், சுபகாரியம் ஏற்படல், வாகனயோகங் கிட்டுதல், நண்பர், கன்னியர், சகோதரர், மாமன்மாரினால் உதவியும் ஆதரவும், பரீட்சை முடிவு மேன்மைக்கு வழிவகுத்தல். காதல், திருமணம் ஏற்படல் புத்திரப்பேறு புதியமனை அமைக்க விழைதல், இடைத்தங்கல் நாட்டைக் கைவிடல், அரசு, தனியார்துறையில் பதவி ஆபரணச் சேர்க்கை இலாப மிகுதி. பயிர்ச் செய்கை அதிக விளைச்சல். நோய் குணமடைதல்.

## சிங்கம்:

குருபகவான் 05.07.2016வரை ஜென்மத்தில் நிற்பதினாலும் அர்த்தாஷ்டம சனி இருப்பதினாலும் (4) அவசர புத்தி ஆபத்தைத் தந்துவிடும். சீதையைச் சிறைவைத்த ஜென்மகுரு - உங்களையும் பலவித கஸ்டங்களை அனுபவிக்கச் செய்தல், மக்கள் பற்றிய சோகம், பயணம் இழுபடல், சத்திரசிகிச்சையினால் தேக நலப்பாதிப்பு, திருடர் எதிரிகளினால் தொல்லைகள் கடன் அடைக்க முடியாது தற்கொலை எண்ணம், முறைதவறிய காதல் விவகாரம், குடும்பப் பிரிவு, பணமுடை யினால் புதியன தொடங்காமை, வெண்ணெய் திரளும்வேளை தாழி உடைதல்.

## கன்னி:

இராவணன் முடியை வீழ்த்திய 12ல் குரு 05.07.2016வரை நிற்கையில் மானபங்கம், தலை குனிவு ஏற்படல், மார்புச் சளியின் கொடுமை, சுபகாரியம் நடாத்த பணத்திற்கு திண்டாட்டம். பெற்றோரின் தேகநலப் பாதிப்பு. குளவி, மயிர்க் கொட்டியினால் அபாயம், மறைமுக எதிரிகள், பாதுகாப்பில் அசிரத்தை, கீரைக்கடைக்கு எதிர்க் கடை முளைத்தல். கௌரவத்தினால் பங்குத் தொழிலைக் கைவிடல். பதவி நிரந்தர மாகாமை, காலநிலையினால் விவசாயக்கேடு. மின்சாரம், நீர்த்தத்தினால் அபாயம் விருதுக்கு சிபார்சு செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துலாம்

7 1/2 ச் சனி கடைக்கூறு நடக்கையில் பழம் நழுவிப் பாலில் விழுந்த கதைபோல 05.07.2016வரை குரு 11ல் இருப்பது அதிர்ஷ்ட அலை உங்கள் பக்கமே, பயணம் குறிக்கோளை அடைதல், நோய் குமடைதல், புத்திரப்பேறு, கடன்தொல்லை நீங்குதல், பழைய மனையைப் புதுப்பித்தல் வாகனயோகம், மூத்த சகோதர உதவி, திருமணத்தில் நிலவிய தடை அகன்றுவிடல். தத்துப்புத் திரயோகம், விபத்தின்றும் மயிரிழையில் தப்பிவிடல். நீண்ட காலத்தின்பின் தாயகம் திரும்புதல், நீரிழிவு நோய் கட்டுப்பாட்டில் வரல், வங்கிக்கடன் கிட்டுதல். குருட்டு அதிர்ஷ்டம் ஏற்படல்.

## விருச்சிகம்

ஏழரைச்சனியுடன் 05.07.2016வரை சிவபெருமானை இரந்துண்ண வைத்த 10ல் குருவுழ் சேர்வதினால் உடையவன் பாராவிட்டால் ஒரு முழம் கட்டை இடமாற்றம், பதவிக்கு கேடு மனையின் கவின் நிலை பாதிப்பு, கால் நடைகள் திருட்டும்போதல், தம்பதியர் மத்தியில் கருத்து முரண்பாடு, சொற்கேளாத பிள்ளைகள், ஆசிரிய மாணவ உறவு பாதிப்பு, ஆயுதங்களால் காயம், முரண்பாடுகள் முற்றி உறவு கெடல், திகதி தப்பிய பொருட்களால் கவலை, தொழில் நிமித்தம் பிரிவு, வெளியூர் பயணம் கானல் நீராதல், கன்னியரால் மானபங்கம், நித்திரையின்மை.

## தனு

ஏழரைச்சனி ஆரம்பித்து நடை பெறுகையில் அதிர்ஷ்ட வசமாக குரு 05.07.2016 வரை 9ல் நிற்பதினால் கால்பதிக்கும் முயற்சிகள் வெற்றிக் கம்பத்தை நாடவைக்கும். பிதாவினைப் பிரிய அல்லது இழந்து போகலாம். திசாபுத்தி நன்றாக இருப்பின் பங்குத் தொழில், ஒப்பந்தம், கிளை நிறுவனம் திறத்தல், விவாகப்பேறு, அரசுத் தொழில், வெளியூர் பயணம், நோய்நீங்குதல், காதல் அரும்பி விடல், வாகனயோகம், நட்டமின்மை, வழக்கு சாதகமுடிவினைத் தரல், சந்தேகம் நீங்கிவிடல், விழாக்களில் கலந்து சிறப்பித்தல் சுவீப் அதிர்ஷ்டமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகரம்

அஷ்டமத்து வியாழன் 05.07.2016வரை நடைபெறும் காலம் உங்கள் முயற்சிக்கு பாதகமான விளைவுகள் ஏற்படலாம். பொறுமை சகிப்புத் தன்மையினால் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வென்றெடுக் கலாம். புதியன தொடங்கமுன் திசாபுத்தி நன்றா எனப்பாருங்கள். பயணம், திருமணம், பரீட்சை என்பன காலை வாரிவிடலாம். வியாழக்கிழமைகளில் தெட்சணா மூர்த்திக்கு அர்ச்சனை வழிபாடு செய்யுங்கள். நம்பகத்தைக் கடைப்பிடித்தல், புதிய நபர்களில் எச்சரிக்கை. அவசரக் குடுக்கை யினால் இழப்புக்கள், புலன் விசாரணை செய்தே காரியங்களில் இறங்கு தல், பொறுப்பின்றிக் கொடுக்காமை குருவின் 05.07.9ம் பார்வைகள் உங்களை வாழவைக்கும் 11ல் சனி இருப்பதினால் சோதனைகள் ஈற்றில் நன்மையைத் தரும். புதிய ஜீவன் உருவாதல்.

## கும்பம்

கண்டகச்சனியால் (10) தொல்லைகள் இருக்கையில் நல்ல காலம் 05.07.2016வரை வியாழன் 7ல் நிற்பது நன்மைகளை அனுபவிக்க குருவருள் சாதகமான நிலைமைகளைத் தக்க வைக்கும். விவாகம் நிறைவேற, பயணம் மீண்டும் ஆரம்பிக்க நோய்கள் குணமடைய, கடன் வந்து கைக்கெட்ட, பதவி சம்பள ஏற்றம் கிட்ட, பிரமுகர்களினால் கௌரவப் பதவிகள் வந்துசேர மழலைப் பாக்கியம், காதல் என்பன கைகூட, பிரிந்த உறவுகள் ஒன்றுசேர, இன்ப சுகங்களை அனுபவிக்க, காணாமல் போனவர் பற்றிய தகவல் கிட்ட, புதிய வர்த்தக நிலையம், புதிதாக இல்லம் அமைக்க, நண்பர், கன்னியரால் வசந்தம் பிறக்க, சுவீப்பில் பணம் அள்ளும் யோகம் உண்டாதல்.

## மீனம்

குரு கோசர நிலையில் கெடுதலை ஏற்படுத்தும் வகையில் 05.07.2016வரை வச்சிரமா முனியை விலங்கிலே மாட்டிய 6ம் இடத்தில் நின்றாலும் மீனம் குருவின் ஆட்சி வீடாக இருப்பதினால் கண்ணுக்கு வருந் துயர் புருவத்துடன் சென்றுவிடும். புதிய ஒப்பந்தம் கைவிடல், வெளியூர் பயணத்தை ஒத்தி வைக்க, புதியமனை, வாகனம் என்பனவற்றில் மனம் வைக்காமை, விவாகத்தைக் கைவிட, மனையாளின் சொற் கேட்பது, உறவினர்களுடன் சுமுக உறவைப் பேண, நோய் நீங்க சத்திர சிகிச்சை மேற்கொள்ள, கொடுத்தவற்றை மீளப்பெற முறைப்பாட்டில் இறங்க, மின்சாரம், நீர்க்கண்டம், விடஜெந்துக்களில் எச்சரிக்கையாக இருக்க விதிமுறை களைப் பேணுவதினால் தண்டம் ஏற்படாமை, சுவீப் அதிர்ஷ்ட முண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாழ மாற்றப் பலாபலன்கள்
# (06.07.2016 - ஒரு ஆண்டுவரை)

## மேடம்

வியாழ பகவான் 06.07.2016 தொடக்கம் ஒரு ஆண்டுக்கு ஆறில் நிற்கையில் நோய்களில் விசேட கவனமெடுத்தல், மாமன்மாரின் உறவில் சிக்கல், எதிரியின் அட்டகாசம், செய்தொழிலில் சஞ்சலம், கொடுத்தவற்றைப் பெறமுடியாதிருத்தல், பயணம் இடைத்தங்கல் நாட்டில் இறக்கிவிடல், புதியன கொள்வனவில் விழிப்பு. திருடரின் கன்னக்கோல் முயற்சி, வாகன யோகம்கிட்ட சகோதரர் பின்னிற்றல், வியாழன் தோறும் தெட்சணாமூர்த்தி வழிபாடு அர்ச்சனை செய்வது துன்பப் பலனைக் குறைத்துவிடும். குருவின் 5, 7, 9ம் பார்வைகளினால் தலைக்கு வருந்துயர் தலைக்கவசத்துடன் சென்றுவிடும். பெற்றோரின் தேக நலத்தில் கவனமெடுங்கள்.

## இடபம்

பொன்னவன் வியாழன் 5க்கு வர மந்திரிப்பதவி கிடைத்தது போன்ற மகிழ்வேற்படும். தடைப்பட்டவை வெற்றிக் கனியைக் கொடுக்கும். மழலைப் பாக்கியம், அரசுத்தொழில் கிட்டுதல், தடைப்பட்ட பயணம் வெற்றியாதல், மாமன்மாரினால் வசந்தகாலம், கடன் தொல்லை நீக்கம், விவாகம் ஈடேறுதல், நோய் குணமடைந்து இளமை பெயர்தல், பரீட்சைச் சித்தியினால் உயர் கல்வி, புலமைப்பரிசில், தொழில் வெளியூர் மணமகனைக் கைப்பிடித்தல் புதிய முயற்சிகள் ஆரம்பம். பங்குத்தொழிலைக் கைவிடல், மனைகோல ஆயத்த மாதல் சிறையினின்றும் மீளல் ஆடம்பரப் பொருட்கள் கொள்வனவு.

## மிதுனம்

நாலிலே குரு 06.07.2016 தொடக்கம் ஒருவருடம் நிற்கையில் எடுக்கின்ற முயற்சிகளில் தடைதாமதம் அலைச்சல் தக்கவைத்தாலும் குரு நட்பாக இருப்பதினால் சோதனை சாதனையில் முடியும். கோசர நிலையினால் தாயாரின் தேகநலப்பாதிப்பு நட்பை முளையிலே கிள்ளிவிடல். காதலில் சந்தேகக்கோடு, புதியன பொருத்தப்படல், குழந்தைக்காக தமிழ்நாடு செல்ல முற்படல், சகோதரவழியில் கவலை, நோய்நீங்க சத்திரசிகிச்சை, குடியுரிமை பெற காகித திருமணம், இரத்ததானம் செய்தல், மனைவியின் சொற்கேட்டதால் மோசடி விலகல். மகாதிசாபுத்தி நன்றாக இருப்பின் நன்மைகள் பலப்பல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்கடகம்

பிரகஸ்பதி குருவின் கடாட்சம் கெடுபலன்களைக் கோசரரீதியில் 06.07.2016 தொடக்கம் ஒருவருடம் வரை 3ல் நின்று அளிக்க நேரிடினும் வியாழன் கடகத்தில் உச்சம் பெறுவதினால் அச்சமில்லாது காரியத்தில் இறங்குங்கள். சகோதர உறவில் எச்சரிக்கை, சுபகாரியத்திற்கு கடன்படல், மீள் நியமனம் பெறல், காசோலைகள் பற்றிய விழிப்பு. திசாபுத்தி நன்றெனின் பயணத் தில் கால் பதிப்பு துர்நடத்தையுடையோரை விட்டு நீங்குதல், பிறர் அழைத்தால் பயணத்தில் இறங்குதல், போலியானவை வந்தடைதல், விலங்குகள் குறுக்கே பாய்வதினால் விபத்து, திடீரென உடல் நலப்பாதிப்பு. தெட்சணாமூர்த்தி வழிபாட் டினால் மலைபோல் வருபவை கடுகாகிப் போய்விடல்.

## சிங்கம்

குரு 06.07.2016 தொடக்கம் 2ம் இடத்திற்கு ஒருவருடம் வரை தக்கவைக்கையில் பயணம் இனிதாக, மழலைச் செல்வம் கிட்ட, பரீட்சை முடிவுகள் சாதகமாக, வாகன யோகம் இன்பசுகங்களை அனுபவிக்க வழக்கின் முடிவு நன்மைதர, ஆடம்பரப் பொருட்கள் கிட்ட, பெற்றோரின் நோய் நீங்கிவிட, செல்லப் பிராணிகளின் வளர்ப்பில் ஈடுபட கடன் தொல்லைகள் நீங்க, சுவீப்பில் பணம் அள்ள, பதவி மற்றும் சம்பள உயர்வு, எதிரியின் அடாவடி அகல, திருட்டுப்போனவை கைக்கெட்ட, காதல் அரும்பிவிட, புதியனவற்றில் கால் பதிக்க, இழந்த சொத்தை மீளப்பெற, பிரிந்தவர் மீண்டும் சேர, புதியன பொருத் தப்படல்.

## கன்னி

ஜென்ம குரு (1) 06.07.2016 தொடக்கம் ஒருவருடத்திற்கு உங்களின் முயற்சிகளுக்கு சோதனைகளைத் தக்கவைத்தாலும் குருவின் நட்பு வீடாக கன்னிராசி இருப்பதினால் நன்மைகள் அடிக்கடி ஏற்படும்.

நிலுவைகள் பெற காவல்துறை செல்ல விழைதல், பூர்விகச் சொத் தினால் களேபரம், விவாகம் இழுபடல், நீர்த்தத்தில் எச்சரிக்கை, இழப்பினால் உளத்தாக்கம், செய்தொழிலில் ஊழியரின் ஒத்துழையாமை, பதவிக்கு கேடுசூழல், புதியனவற்றில் கால்பதித்தல், கடன் அடைக்க மேலும் கடன்படல், திசாபுத்தி நன்றெனின் பயணம் வெற்றிதரல், மக்களின் அழைப்பினால் பெற் றோருக்கு வெளியூர் யோகம் பாதுகாப்பில் விழிப்பாயிருத்தல், நூதன நோய் ஏற்படல் இஷ்ட தெய்வ வழிபாட்டினால் கஷ்டங்கள் குறைதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துலாம்

கோசர ரீதியில் 06.07.2016 தொடக்கம் குரு வருடம் ஒன்றுக்கு 12ல் நிற்பதினால் செலவுகள் எல்லை மீறுதல், பயிர்ச்செய்கை நட்டமேற் படுத்தல், கன்னியர் தொடர்பால் பிரளயம், நோயும் மருந்துமாகத் திரிதல், எதிரி திருடர்கள் பற்றிய எச்சரிக்கை, வழக்கு ஏற்படல், சொத்துப்பிரச்சினை நீதி மன்றை நாடவைத்தல், பிதாவின் பிரிவும் இழப்பும் திகதி தப்பிய பண்டங்கள் சேரல், வங்கித் தொடர்பு அறும் நிலைப்பாடு, விபத்தினால் அங்கப்பழுது, வாய்ச்சம்பிர தாயத்தினால் காரிய சித்தி, மனைவியுடன் மனத்தாங்கல், ஆவணங்கள் தவறும் அபாயம், ஜாதகத்தில் குரு நல்ல இடத்தில் நிற்பது, 5, 7,9ம் பார்வைகள், பார்த்தல் தெய்வ வழிபாட்டினால் தானதர்மம் செய்வதினால் கெடுபலன்கள் குறைவடையும்.

## விருச்சிகம்

பத்தில் வியாழன் நீங்கி 06.07.2016தொடக்கம் ஒருவருடத்திற்கு குரு 11ல் நிற்பதினால் தொடுத்த காரியங்கள் உங்களை அதிர்ஷ்டசாலியாக்கும். நட்டம் இலாபத்தை நோக்கி நகரும். பயணம் அந்த மாதிரி வெற்றியைத்தரல், கடன் தொல்லை நீங்கி, விவாகமேற்பட, நோய்கள் குணமடைய, வாகனயோக மேற்பட, குடியுரிமை கிட்ட, தனித்தொழிலில் ஈடுபட மயிரிழையில் விபத்திலின் றும் தப்பிவிட, மீண்டும் அரச பணிக்குச் செல்ல, கௌரவப் பதவிகள் ஏற்பட, காதல் மலர்ந்து திருமணம்வரை பயணிக்க, புதிய தொடர்புகள் பொருத்த எதிரி திருடரின் தொல்லைகள் நீங்கிவிட, புதியமனை, வாகனயோகம் கிட்ட, நண்பரி னால் வசந்தமேற்பட சுவீப் அதிர்ஷ்டமுண்டாகலாம்.

## தனு

வருகின்றார் 10ல் வியாழன் செய்தொழிலில் போதிய கவனமெடுங்கள். 06.07.2016 தொடக்கம் ஒருவருடம்வரை ஈடுபடும் முயற்சிகளில் நன்மை கிட்ட வியாழக்கிழமைகளில் தெட்சணாமூர்த்தி வழிபாட்டைக் கைவிட வேண்டாம். பிறர் உதவினால் பயணத்தில் கால்பதிப்பு, நட்டத்தினால் தொழிலக் கைவிட்டு பங்கில் சேரவிரும்புதல், பூர்வீகச் சொத்தினை விற்றல், “லீசிங்” வாகனம் பறி முதலாகும் பாதுகாப்பில் விழிப்பு, போலிகள் கைக்கு வரல், சகோதரரின் நோயில் கவலை ஏலம்போகும் செய்தி: புதிய உறவுகள் காலை வாரிவிடல், ஒப்பந்தங்களால் நட்ட நிலைப்பாடு, விபத்தினால் தேக நலப்பாதிப்பு, ஆலய தரிசனம், சுற்றுலா மேற்கொள்ளல், பழுதான உணவினால் கெடுதி, சத்திர சிகிச்சை ஏற்படல், போதைவஸ்த்தினால் தண்டம் மறைமுக எதிரிகளால் பாதிப்படைதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ பொறுக்கிய முத்துக்கள்! ★

01. பெண் குழந்தைகளுக்குப் பெயர்வைக்கும்போது பிதாவின் முன் எழுத்தும் சேர்க்கப்படவேண்டும்.

02. ஒருவரின் பெயர்கள்/கையொப்பத்தின் கூட்டுத்தொகை 2ல் அமையின் சிக்கல் 3 எனின் கவலை சுமை ஏக்கம், 4 என்றால் பகைமை, 7வரின் சோதனை, 8 என்றால் துர் அதிர்ஷ்டங்கள் ஏற்பட்டுவிடும்.

03. ஜாதகத்தில் எட்டாம் இடத்தில் சந்திரன் இருப்பின் நீரினால் கண்டம் ஏற்படும் அபாய முண்டாகும்.

04. விவாகம்/தாலிபூணல் ஆகிய தினங்களில் கூட்டு எண் 4 வரின் குடும்பத்தில் குழப்பத்தையும் 5 எனின் விவாக வாழ்வு பயனற்றுப் போவதையும் 8 வந்தால் அதிர்ஷ்டகரமற்றதாகவும் அமைந்துவிடும்.

05. உங்களின் பெயர் அல்லது கையெழுத்து 51ம் எண்ணில் வரின் கொலை செய்யக்கூடிய விரோதிகள் ஏற்படுமாகையினால் பிறருடன் நட்பையும் ஒத்துப் போகும்நிலைமையையும் வளர்த்துக் கொள்ளுங்கள்.

06. ஏழாம் எண்ணில் (7/16/25) பிறந்தவர்களுக்கு திருமண வாழ்வில் கசப்பு ஏற்படும் என்பது கட்டுக்கதையாகும்.

07. மூலநட்சத்திரத்தில் பிறந்த பெண் விவாகஞ் செய்யும் மணமகனின் தகப்பனார் தயாருக்கு கெடுதி விளையும் என்பதையும் நம்ப வேண்டாம்.

08. ஆயிலிய நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் இளவயதுத் திருமணத்தை இயன்ற வரை மேற்கொள்ளவேண்டாம்.

09. ஜாதகத்தில் 1/2/4/7/8/12 ஆகிய இடங்களில் செவ்வாய் இருப்போர் மண வாழ்வு சிறப்படைய செவ்வாய் தோஷமுடையோரையே திருமணம் செய்யுங்கள்.

10. ஜாதகத்தில் இராகு கேது சர்ப்பக் கிரகங்களுக்குள் ஏனைய கிரகங்கள் அடங்கி இருப்பது காலசர்ப்ப தோஷம் ஆகும். இதனால் விவாகம் முதலி யன கேள்விக்குறியாகும். நாக விளக்கினை வீட்டில் சாமி அறையில் வைத்து வழிபட்டுவர இத்தோஷம் விலகி நன்மைகள் ஏற்படும்.

11. வலது அல்லது இடதுகையில் சந்திர மேட்டில் கறுப்பு மச்சம் இருப்போர் தண்ணீர் தத்தில் விழிப்பாக இருங்கள்.

12. ஜாதகத்தில் ஆணின் சனீஸ்வரன் பெண் ஜாதகத்தில் உள்ள சந்திரனை 3/7/10ம் பார்வைகள் பார்ப்பின் குடும்பப் பிரிவினை நிச்சயம் எதிர் பார்க்கவும்.

13. பெண்ணின் ஜாதகத்தில் உள்ள சந்திரன் விவாகம் செய்யும் போது மண மகனின் சனீஸ்வரனை 3 அல்லது 7அல்லது 10ம் பார்வை பார்ப்பின் மண விலக்கு ஏற்படலாம்.

14. ஜாதகத்தில் 5 அல்லது 9ம் இடத்தில் இராகு/கேது/சனி இருப்பின் புத்திர தோஷம் ஏற்படலாம்.

15. ஜாதகத்தில் லக்கினத்தில் இருக்கும் சூரியன் 7ம் பார்வை பார்க்கு மிடத்து விவாகத்தில் வெற்றிவாய்ப்புக் குறைவடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. 3/12/21/30 திகதிகளில் மழலை பிறந்தால் பிதாவுக்கு கஸ்டகாலம் ஆரம்பிக்கும். 12ம் திகதி எனின் பொருளாதாரச் சரிவும் சில சமயம் கண்டமும் நேரிடலாம்.

17. எந்தத் திகதியில் பிறந்திருக்கும் குழந்தைகளுக்கு ஆண்டு மாதம் வருடத்தைக் கூட்டவரும் கூட்டெண் 8 எனின் 5ம் எண்ணிலேயே பெயரை வைத்தல் மிக மிக அவசியம்.

18. இயன்றவரை D என்ற ஆங்கில எழுத்து L என்ற தமிழ் எழுத்து வரிசை கள் பெயரில் வராதிருத்தல் நலம் பயக்கும்.

19. 32 எண் உயர்வையும் தாழ்வினையும் மாறி மாறி ஏற்படுத்து மாகையால் கையொப்பம்/பெயர்/வியாபார நிலையப் பெயர்கள் இந்த எண்ணில் அமைவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

20. அதிர்ஷ்ட எண்ணுக்குப் பெயரினை மாற்றிக்கொண்டவர்கள் தினமும் தமது பெயரை எந்த எண்ணின் தொகையில் இருக்கின்றதோ (உதாரணமாக 23 எனின்) 23தரம் வைத்து 108 நாட்களுக்கு வைத்து வர அதிர்ஷ்ட சக்தி பிரவாகமெடுக்கும்.

21. எட்டாம் எண்ணை எழுதும்போது தொடர்ந்து எழுதாமல் மேலும் கீழும் இரண்டு வட்டங்களை அமைத்து எழுதுங்கள். இதனால் சனீஸ்வரனின் கெடுதல் நீங்கும்.

22. உங்கள் கையெழுத்து நேர்கோட்டில் அமையாது முப்பது பாகை யாவது உயர்ந்து செல்லும் நிலைப்பாட்டில் வைத்து வருதல் அதிர்ஷ்டம் தரும்.

23. 29ம் திகதிகளில் பிறக்கும் பெண்கள் கணவன்மாரை நீதிமன்றத்துக்கு அழைப்பார்கள்.

24. புதிய காரியங்கள் தொடங்க முற்படுகையில் 28ம் திகதியை தவிர்த்துக் கொள்ளுங்கள்.

25. இரத்தினங்களை ஆபரணங்களில் வைக்கும்போது உடலின் தோலுடன் முட்டுவது அவசியம்.

26. நித்திரை மேற்கொள்ளும் வேளையில் தலை கிழக்குத்திசை நோக்கி இருத்தல் அதிர்ஷ்டகரமான வாழ்வு அமையும்.

27. தாயறை (சாமி அறை)யில் நின்று பார்க்கும் போது குசினியின் அடுப்பு வெளிச்சம் தெரிவது நலம் விளையும்.

28. இயன்றவரை மாற்றுச் சம்மந்தம் புரிவதைக் கைவிடுங்கள்.

29. எட்டில் செவ்வாய் இருப்பவர்கள் ஆயுட்பலமானவர்களையே திருமண பந்தத்தில் இணைத்துக்கொள்ளுங்கள்.

30. பிறர் பிள்ளையைக் கையேற்கும் தத்துப் புத்திரயோகம் அதிர்ஷ்டத் தைக் கொண்டுவரும்.

31. பிறக்கும் பிள்ளைகள் தொடர்ந்து நோய் நொடிகளால் பாதிக்கப்படின் (அரிஷ்ட தோஷம்) பிறருக்கு விற்று வாங்கவும்.

32. ஆண்பெண் நட்சத்திரங்கள் ஒரே ரச்சில் இருப்பின் அம்மன் தாலி/ புறாத்தாலி கட்டுவது அவசியம்.

33. செவ்வாய் தோஷம் சில காரணங்களினால் கெடுதிதராது என்பதை திருக் கணித பஞ்சாங்க மூலம்/சோதிடர்களைச் சந்தித்து அறிந்துகொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. வாஸ்து முறைப்படி அமைக்கும் புதிய மனைகள் பதினாறும் பெற்று பெருவாழ்வை ஏற்படுத்தும்.
35. விவாகம் புரியும்போது ஜாதகப் பொருத்தத்துடன் எண் பொருத்தமும் அமைவதும் சிறப்பைத்தரும்.
36. 9ம் எண்ணில் (9/18/27) பிறப்போருக்கு விபத்துக்களினால் காயங்கள் மற்றும் பிற காரணங்களினால் தேகத்தில் வடுக்கள் ஏற்படுவது சகஜமாகும்.
37. கோசர நிலையில் வியாழன் 2/5/7/9/11ம் இடங்களுக்கு வரும் போது நன்மைப் பலா பலன்கள் ஏற்படும். சனீஸ்வரன் இராகு கேது என்பனவும் 3/6/11ல் வர கெடுபலன்கள் குறைந்து விடும்.
38. ஏழரைச்சனி மங்கு/மரணச் சனியாக இருப்பின் கஸ்டங்களையும் பொங்கு சனி என்றால் அதிர்ஷ்டத்தை ஏற்படுத்தும்.
39. பூரணைச்சந்திரன் (வளர்பிறை) காலத்தில் பலவீனமுள்ளவர்களின் உளம் பாதிக்கப்பட்டுப் பிறரைப் பழிவாங்க முயற்சிப்பர்.
40. பெயரெண் 47ல் அமையின் மருத்துவ சிகிச்சை பலனளிக்காமல் அவதியுறு வதுடன் சிலர் கண்பார்வையை இழக்கின்றனர்.
41. பகையோனிகளைத் தவிர்க்குக.
குதிரை – எருமை / யானை – சிங்கம்
குரங்கு – ஆடு/பாம்பு – கீரி/
மான் – நாய்/எலி–பூனை மாடு – புலி
42. ஆணுக்கும் பெண்ணுக்கும் கிரக பாலம் 16வரை குறையலாம்/கூடலாம்.
43. குழந்தைப் பலன் விருத்தியடைய ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒருவருக் காவது பால் உள்ள விருட்சமாவது இருத்தல் நன்று.
44. சந்திர மேட்டை நோக்கி புத்திரேகை செல்லுமாயின் சிலருக்கு பைத்தியம் பிடித்துவிடலாம்.
45. ஐந்தாம் எண்ணில் பிறந்த கன்னியரை (5/14/23) ஆண்களுடன் பழகவிடின் கற்பு நெறி கெட்டு பாலியல் துஷ்பிரயோகம் ஏற்படலாம்.
46. மணமக்களுக்கு 1ம் 4ம் எண் இருப்பின் இரும்பும் காந்தமும் போல மனமொத்து வாழ்வர்.
47. எட்டாம் எண்ணில் பிறப்போர் (8/17/26) ஆறு நூல்கள் உடைய நீலக்கல்லை/ இந்திர நீலத்தை அணியின் அதிர்ஷ்ட சாலிகளாவர்.
48. சுக்கிர ஆதிக்கருக்கு குருவும் செவ்வாய் ஆதிக்கருக்கு சந்திரனும் தீமை புரிவார்கள்.
49. மூன்றாம் எண்ணில் பிறந்தோர் (3/12/21/30) ஒருக்காலும் வெள்ளியில் ஆபரணங்களை அணிய வேண்டாம்.
50. மனம்போன போக்கின்படி அடிக்கடி பெயரினை/கையொப்பத்தை மாற்றி அல்லற்பட வேண்டாம்.
51. பெயர் எப்படி எழுதப்படுகின்றதோ அப்படியே கணக்கிடவேண்டும். பதவி யைக் குறிக்கும் சொற்களை (B.A) மரியாதைக்காக சேர்க்கப் படும் (MR) முதலிய எழுத்துக்களுக்கும், பெயருக்குப் பின்னர்வரும் எழுத்துக் களுக்கும், எண்ணை மதிப்பிடவேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

52. ஏழாம் எண் மனிதர்களால் அடக்கி ஆள முடியாதது. மனதுக்கு எட்டாத ஆத்மதத்துவத்தைக் குறிப்பதனால் இதைத் துணைகொண்டு உலக வாழ்க்கையில் வெற்றிபெற முடியாது.

53. 28ம் திகதிகளில் பிறந்தவர்கள் காதலித்தாலும், மனவலிமை குறைந்தவர்களாதலால் அவர்களது காதல் மற்றவர்களால் துண்டிக்கப்படும்.

54. முதலாம் எண்ணினர் (1/10/19/28) நோய்கள் குணமடைய ஆயுர் வேதம் மற்றும் இயன்மருத்துவத்தை நாடுவர்.

55. ஐந்தாம் எண்காரர் சபலசித்தம் கொண்டவர்கள். சமூகக் கட்டுப்பாடுகளை மீறி அவசரப்பட்டு மணந்து கொண்டு பின்னால் அவதிப்படுவார்கள்.

56. ஐந்தாம் எண்ணினர் (5/14/23) புத்தியின் தூண்டுதலின்படி நடந்து கொள்வதால் பெரிய ஆபத்துக்கள் சூழ்ந்தவேளையிலும் தப்பிப்பிழைத்து விடுவர்.

57. பெற்றோருக்காக மூன்றாம் எண்ணினர் (3/12/21/30) காதலைத் தியாகம் செய்துவிடுவர்.

58. முதலாம் எண்காரருக்குப் பார்வைக்கோளாறு ஏற்பட்டாலும் 28ம் திகதி பிறந்தவருக்கு கண்ணாடி அணியத் தேவைவராது.

59. ருதுவான நேரம் கணித்து எழுதப்படும் ஜாதகப் பலாபலன்கள் மங்கை யருக்கு பிறந்தபோது எழுதப்பட்ட ஜாதகத்தைவிட வலிமையானது.

60. 11ம் திகதி பிறக்கும் குழந்தைகளை தெய்வ நம்பிக்கை உடையவர்களாக வளர்ப்பது பெற்றோரின் கடமையாகும்.

61. சூரியனும் செவ்வாயும் கிரகநிலை இராசிச் சக்கரத்தில் ஒரு வீட்டில் இருப்பின் விவாகத்தின் பின் கணவனைப் பிரிய/இழக்கும் அமங்கலி யோகம் உண்டாகும். சூரியன் செவ்வாயைக் குரு பார்ப்பின் நன்மை உண்டாகும்.

62. ஒருவருடைய பெயருக்கு இனிசலாக F அல்லது P என்ற எழுத்துக்களைச் சேர்த்தால் சனீஸ்வரனின் தீய பார்வை பெயர் எழுத்துக்களில் பரவி நாசம் விளைவிக்கும் எனவே Pக்கு முன்வரும். G போன்ற எழுத்துக்களைச் சேர்க்கலாம். (G.G.பொன்னம்பலம்)

63. பெயர்களை இயற்கையாகவே வையுங்கள் நாதன் என்பதை NATHAN என்றே எழுதவேண்டும். NAATHAN என எழுதின் அதிர்வு ஒலியினால் அதிர்ஷ்டம் அற்றுப்போய்விடலாம்.

64. அதிர்ஷ்ட எண்ணில் பெயரமைத்து விட்டு, கையொப்பத்தையும் அதிர்ஷ்டகரமான எண்ணாக அமைத்துவிட வேண்டும். ஒரு சிலரின் பெயர் நன்றான எண்ணில் இருக்கும். ஆனால் கையொப்ப எண் துர்அதிர்ஷ்ட நம்பராக அமைந்து காணப்படும்.

65. கையொப்பம் வைக்கின்ற வேளையில் மனதில் பின்வரும் வார்த்தைகளைப் பதிவு செய்யுங்கள்/நினையுங்கள். நாளாந்தம் எல்லா வழிகளிலும் என்னுடைய வாழ்க்கை முன்னேறி முன்னேறி வருகின்றது

66. படுபட்சித் தினங்களையும் (பூர்வபட்சி/அபரபட்சி) கருத்திற்கொண்டு மேற்கொள்ளும் சுப காரியங்கள் பாழ்போகாது.

67. முழிவியளங்கள்/சகுணங்களில் நம்பிக்கைவைத்துச் செய்யப்படும் பிரயாணங்கள் நல்லதை/கெட்டதைத் தந்துவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A - 1
B - 2
C - 3
D - 4
E - 5
F - 8
G - 3
H - 5
I - 1
J - 1
K - 2
L - 3
M - 4
N - 5
O - 7
P - 8
Q - 1
R - 2
S - 3
T - 4
U - 6
V - 6
W - 6
X - 5
Y - 1
Z - 7

## *மக்கள் சேவை மகேசனுக்கே*

**R - MEERA = 19**
**2 - 4 5 5 2 1**

- குழந்தைகளுக்கு தேன் சிந்தும் அழகு சொட்டும் அதிர்ஷ்டமான பெயர் சூட்டித்தர.
- வியாபார நிலையங்கள் இலாபத்தையும் முன்னேற்றத்தையும் அடைய அதிர்ஷ்டகரமான பெயர்கள் அமைக்க.
- உங்களுக்கு வளமான வாழ்வமைய அதிர்ஷ்ட எண்களில் கையெழுத்தினை ஏற்படுத்த.
- திருமணப் பொருத்தம், ஜாதகம் மற்றும் எண் சோதிடம் மூலம் அந்தமாதிரி பார்த்துத்தர.
- உத்தியோகத்தில் உச்ச நிலைக்கு வரும்படி பெயரினை/ கையொப்பத்தை வைக்க.
- வெளியூரில் பிறக்கும் குழந்தைகளுக்கு அந்தந்த நாட்டு ஜனனமான இடத்தை வைத்து ஜாதகக் குறிப்பும் பலனும் எழுதித்தர/அனுப்ப.
- உள்ளூரில் பிறக்கும் மழலைக்கு வாக்கியம் அல்லது திருக்கணித பஞ்சாங்கப்படி ஜாதகங்கள் கணித்துத்தர.
- கல்வியில் முன்னேற/நோய்கள் நீங்க/விவாகம் கைகூட அதிர்ஷ்ட இரத்தினங்கள் தருவதற்கு.
- நாக தோஷம், காலசர்ப்ப தோஷம் அகன்று திருமணத்திற்கு முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கும் அம்சங்களை நீக்க, சர்ப்ப விளக்குப் பெற.
- ஜாதி, மத பேதமின்றி சகல சமூகத்தினருக்கும் ஆனந்தி திருமண சேவை மூலம் மணமக்களை உள்நாடு மற்றும் வெளி நாடுகளில் தேடித் தருவதற்கு.
- காரிய சித்திகளுக்கு கைவசம் கொண்டு செல்லும் இயந்திரங் கள் பெற.
- மன்னவன் பிறந்தநாளும் மங்கையர் பூத்தநாளும் – ருது ஜாதகப் பலாபலன்கள் எழுதித் தர.
- மனையடி சாத்திர விதி முறைகளுக்கேற்ப பொருத்தமான நிலத்தில் மனை அமைக்க நிலையம் தெரிவு செய்ய.
- பழைய ஜாதகங்களில் காணப்படும் தவறுகளைக் கண்டறிந்து புதுப்பித்து தருவதற்கு.
- உங்கள் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கும் நேரத்தில் கைரேகை/ எண் ஜோதிடம்/ஜாதகம் மூலம் பலாபலன்களை அறிய.
- கல்வெட்டுக்கள் எழுதித்தர.

**V.A.சிவராசா., B.A. B.; Phil; Dip.in Edu**
**56, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**
**தொ. பேசி: 021 2228708**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HAPPY BIRTH DAY

## வாழ்வில் அதிர்ஷ்டசாலியாவதற்கு இவற்றைக் கடைப்பிடியுங்கள்

| பிறந்த திகதிகள் | அணியும் இரத்தினக் கற்கள் | அதிர்ஷ்ட திகதிகள் | துர் அதிர்ஷ்ட திகதிகள் | அதிர்ஷ்டம் தரும் ஆடை நிறங்கள் | பெயரெண் |
|---|---|---|---|---|---|
| 1-10-19-28 | மாணிக்கம்/ புட்பராகம் | 1-10-19 5-14-23 | 8/17/26 | மஞ்சள்/ சிவப்பு | 1/5 |
| 2-11-20-29 | முத்து | 7-16-25. 5-14-23 | 9/18/27 | பச்சை | 6/1 |
| 3-12-21-30 | புட்பராகம்/ செவ்வந்தி | 9-18-27 3-12-21-30 | 6/15/24 | ஊதா | 9/5 |
| 4-13-22-31 | கோமேதகம்/ நீலம் | 1-10-19 5-14-23 | 8/17/26 | நீலம் | 1/5 |
| 5-14-23 | வைரம்/ வெள்ளை நீலம் | 9-18-27 5-14-23 | 2/11/20/29 | சாம்பல் | 1/5/9 |
| 6-15-24 | மரகதப்பச்சை | 6-15-24 9-18-27 | 3/12/21/30 | பச்சை | 6/9 |
| 7-16-25 | வைடூரியம் | 7-16-25 5-14-23 | 8/17/26 | வெள்ளை | 6/5 |
| 8-17-26 | நீலம்/ இந்திர நீலம் | 1-10-19 5-14-23 | 8/17/26 | நீலம் | 1/5 |
| 9-18-27 | பவளம் | 9-18-27 5-14-23 | 2/11/20/29 | சிவப்பு | 9/6 |



அச்சமைப்பு :- மதிகலர்ஸ், நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகரம்

அட்டமத்து வியாழன் நீங்குவதே அதிர்ஷ்டத்தின் திறவு கோலாகும். 06.07.2016 தொடக்கம் ஒருவருடம் வரை குருவின் 8ம் கோசரம் நீங்கப்பெற்று 9ம் இடத்திற்கு வருகை தந்து உங்களுக்கு நன்மை செய்யும் நிலைப்பாட்டில் அமர்ந்து விடுவார். புதிய பதவிகள் கிட்ட வாகனயோகம் விவாகம் கைகூட, புத்திர பாக்கியம் மாமனின் உதவி, மூத்த சகோதரர் பிதாவினால் வசந்தகாலம், எதிரி, திருடரின் தொல்லையகலல், மனைகட்ட, நோய் நீங்கிவிட அச்சமும் பதகளிப்பும் அற்றுப்போக, நிலுவையின் ஒருபகுதி வந்துசேர, பணியில் ஏற்பட்ட பாதிப்பு அகன்றுவிட, வழக்கின் முடிவுகள் சாதகமாக அமைய, பொறுப்பின்றிக் கொடுத்தவை கைக்கெட்ட சுவீப்பில் பணம் அள்ளிவிட வெளியீடுகளில் ஆர்வம் காட்ட கலைத்துறையில் பரிசில் பாராட்டுக் கிட்டும்.

## கும்பம்

வியாழபகவான் 06.07.2016 தொடக்கம் ஒருவருடம் வரை 8ம் இடத்தில் நிற்கும்வேளை கெடுதலான பலன்களையே அனுபவிக்க காரகத்துவம் இருப் பினும் குருவின் நட்பு வீடாக கும்பம் இருப்பதால் கண்ணுக்கு வருவது புருவத் துடன் சென்றுவிடும். செய்தொழிலை உயிராகப் பார்க்கவும் போட்டிகள் மலியும், பிறரை நம்பி ஒப்படைக்காமை, பிறரின் உதவியினால் பயணம் இலக்கினை அடைதல், கடன்கட்ட சொத்தினை/நகைகளை விற்கும் நிலைப்பாடு, ஆலய நிர்வாகங்களில் பதவி ஏற்படுதல், விஷஜெந்துக்கள் சம்சாரம் மற்றும் மின்சாரத் தினால் கெடுதி சகுனங்களில் நம்பிக்கைவைத்துச் செயலாற்றுதல், விவசாய முயற்சியில் இறங்குதல், வியாபாரம் முன்னேற புதிய யுக்திகளைக் கையாளுதல், தனித்துச்சென்று சிக்கலில் மாட்டுப்படலாம்.

## மீனம்

குருவின் ஆட்சி இல்லத்தில் 7ம் கோசரத்திற்கு 06.07.2016 தொடக்கம் வியாழன் ஒருவருடம்வரை நிற்கையில் தொட்டது பொன்னாதல், கைவிட்ட திருமணம் கைகூடி புத்திரபாக்கியம் கிட்டுதல், வெளியூர் பயணம் நன்மைதரல், அரசு தனியார்துறைகளில் வேலைவாய்ப்பு களத்திரத்தின் நோயில் கவனமெடுத் தல் மக்களால் மதிப்பும் பெருமையும் வந்தடைதல் பரீட்சை முடிவு உயர்விற்கு வழியேற்படுத்தல். நோய்நீங்கி உடலில் தைரியம்/வீரியம் ஏற்படல் மாமன் மாருடன் உறவுமேம்படல், மேலும் ஒரு கிளை நிறுவனம் திறத்தல் கைவிட்டி ருந்த காதல் மீண்டும் மலர்தல் பிரமுகர்களினால் கௌரவப்பதவிகள் கிட்ட சிபார்சு குடும்ப சகிதம் ஆலயங்களுக்கு தரிசனம், பழைய பகைமை மறந்து உறவுக்கு கைகொடுத்தல் சுரண்டலால் பணம் கிட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நல்வாழ்த்துக்கள்

கலாச்சார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டலில் ஜோதிடர்களைக் கௌரவித்து கலாச்சார அமைச்சர் ரி.பி. ஏக்கநாயக்க

**ஜோதிர் வித்தியா ரத்னாவிருதினையும்**

அகில இன நல்லுறவு ஒன்றியம் சமூக கலை கலாச்சார பொது விடயங்களில் ஈடுபாடு கொண்டுள்ளவர்களுடன் தெரிவு செய்யப்பட்ட கல்விமான்களுக்கும் வர்த்தகர்களுக்குமான சமூக சேவையாளர் பட்டமளிப்பு விழாவில் வணிக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் அவர்கள்

**சாம ஸ்ரீ தேசிய மானியவிருதினையும்**

திரு. V.A.சிவராசா அவர்களுக்கு வழங்கியமையை பாராட்டும்

DR.M.முத்துக்குமார் (சாம ஸ்ரீதேசிய மானியா)

கொழும்பு கிளினிக் பிரதான வீதி மொனறாகல

பதுளை பாமசி
'இல. 03 இராஜவீதி பதுளை.

டயானா பன்சி ஸ்ரோர்ஸ்
நுவரெலியா

வாழ்த்த வயதில்லை வணங்குகின்றோம்

**பிறப்பு ஒரு சம்பவமாக இருக்கலாம் ஆனால்**
**இறப்பு ஒரு சரித்திரமாக இருக்கவேண்டும்**

-அப்துல் கலாம்-

Printed By:- Mathi Colours, Nallur. 0212229285

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org